முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 26 திகதி முதல்

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 01 திகதி வரை

(11.09.2022 ஞாயிறு முதல் 18.09.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அமுதக் கடலாய் அன்ன சேவை
   ஆற்றுகின்ற ஆறுமுக அரங்கனே
   நேமமுடன் உனை போற்றி இனிதே
   நிலமதனில் அகத்திய மகரிஷி யானும்
2. யானும் அரங்க ஞானி நீ கேட்க
   இந்தியா தமிழகத்தின் வருங்கால பலனாக
   ஞானமுள சுபகிருது யாளிதிங்கள் இருபானாற் திகதி மேல்
   நங்கை திங்கள் முதல் திகதி வரையான
3. ஆனதொரு வார ஆசிதனை உரைப்பேன்
   ஆளுமைகள் புண்ணிய புவியாம்
   ஞானவான்கள் நிறைந்த தமிழக
   நல்வழிகாட்டலை ஏற்றால் தான்
4. ஏற்றால் தான் இந்திய ஆளுமைக்கு
   எல்லா வகையும் ஆற்றல் கூடி
   மாற்றம் பொருளாதார வளமுமாக
   மக்களை காக்கும் வல்லமையுமாக
5. ஆகவே அற்புதங்கள் நடக்கும்
   அவசியம் அடிப்படை வரையரையிலா
   மிகைபட மக்கள் மேல் விதிக்கும்
   மேன்மைதரா வரிச்சுமை அகற்றி
6. அகற்றி பாதுகாப்பான வழிவகை
   ஆளுமைகள் மேலும் கீழுமென
   வகைசெய்து கண்டால்தான் இனி
   வளர்ச்சிநிலை தமிழகம் இந்தியா அடையும்
7. அடையவே லஞ்ச லாவண்ய வகை
   அதிகார வர்க்க செயல்பாடுகள்
   தடை செய்யப்பட்டுக் கட்டுப்பாடுகள்
   தருமப்படி தக்கபடி சேவை முறையாக
8. ஆகவே செயல்பாடுகள் மாறி
   அனைத்து செயல்திட்டங்களுமே
   வகையாக அரங்கேறினால் தான்
   வளர்ச்சிதனை அரசுகள் அடையும்

9. அடையவே ஞானவான் காட்டும்
ஆறுமுகனார் வழிபாடு முறையுடன்
தடையற தயவுநெறி முறைகளை
தாரக மந்திரமாக ஏற்று
10. ஏற்றுமே எங்கும் உயிர்கொலை நீக்கி
இயல்பான பரோபகாரம் மிக்க
ஆற்றல் கொண்ட தலைமையாக
ஆளுமைகள் செயல்பாடு காண
11. காணவே இந்தியா தமிழகம்
கண்டுரைப்பேன் மற்றதேசம் வியக்க
ஞானமொடு தானதரும சர்வபலமாக
நம்பிக்கை தரும் தேசங்களாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 26ம் நாள் 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 01 ம் நாள் 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள்:

கடல்போல் அளவிலாது அன்னதானங்களை செய்து உலக மக்களின் பசிப்பிணியை போக்கி காக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் அரங்க ஞானி நீ கேட்கவே இந்தியா தமிழகத்தின் வருங்கால பலனாக சுபகிருது வருடம் ஆவணி மாதம் 26ம் நாள் 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி 01 ம் நாள் 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டினை ஆட்சி புரிவோர் ஞானிகள் நிறைந்த புண்ணிய பூமியாம் தமிழகத்தின் ஞானவான்கள் நல்வழிகாட்டலை ஏற்று தர்மத்தின் வழிதனிலே நடந்து வந்தால் இந்திய தேசம் முழுதும் எல்லா வகையிலும் ஆற்றல் பெருகி மாற்றங்கள் உண்டாகி பொருளாதார வளம் பெருகி மக்களை காக்கின்ற வல்லமையும் பெருகி பலவிதமான அற்புதங்கள் நிகழுமப்பா.

ஆகவே மக்களின் அடிப்படை தேவைகள் மீதும் மற்ற அதிகமான வரிகளை நீக்கி மக்கள் துன்பத்தினை துடைத்தால் மக்களுக்கு பாதுகாப்பான வகையில் வரிகளை மத்திய மாநில அரசுகள் விதித்தால் இனிவரும் காலம் இந்தியா தமிழகம் மேன்மேலும் வளர்ச்சி காணுமப்பா.

நாட்டினில் நிலவும் லஞ்ச லாவண்யங்களை கட்டுப்படுத்தி செயல்பாடுகளை காண்பதோடு தர்மத்தின் வழியில் அதிகார வர்க்கங்கள் நடந்து அவரவரும் சேவை மனப்பாண்மையுடன் நடந்திடவேண்டும் இவ்விதமே உறுதியுடன் நடந்திட நல்ல வளர்ச்சியை நாடு அடைந்திடும்.

நாடு வளர்ச்சியடைய ஞானத்தின் தலைவன் முருகப்பெருமானை வழிபாடுகள் செய்வதுடன் தயவே வடிவான தயவுநெறிக் கொள்கைகளை தாரக மந்திரமாக ஏற்று நாடெங்கும் உயிர் கொலை நீக்கி புலால் மறுத்து சுத்தசைவ உணவினை மேற்கொண்டு பரோபகாரம் மிக்கவர்களாக நடந்து பிற உயிர்களுக்கு இரங்கி இதம்புரிந்து ஆற்றல் மிக்க தலைமையாக செயல்பட இந்தியா தமிழகம் உலகின் மற்றய தேசங்கள் எல்லாம் வியக்குமாறு ஞானம்மிக்க தேசமாக தானதரும பலம் மிக்க தேசமாக சர்வபலம் மிக்க தேசமாக நம்பிக்கை மிக்க தேசமாக மாறிடும். எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–